சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.198/2018

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் பி.வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபாகர் | வயது | 42 |
| த/பெ | மாணிக்கராஜ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | ஆலங்கொம்பு | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | வியாபாரம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :

இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் நான் பூமியை விலைக்கு வாங்கினேன் என்றால் சரி தான். எனக்கு இந்த வழக்கு நிலுவையில் இருந்த விவரம் தெரியும் என்றால் தெரியும். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் பள்ளவாரி மற்றும் புல எண்.747, 748 மற்றும் 749 பற்றியும் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்குள் நடைப்பெற்ற பத்திர பரிவர்த்தனைகள் பற்றியும் எனக்கு நன்கு தெரியும் என்று கூறி உள்ளேன் என்றால் சரி தான். புல எண்.747 ல் யார் யாருக்கு எவ்வளவு பூமி உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. புல எண்.747 ல் மொத்த விஸ்தீரணம் 3.73 ஏக்கர் என்றால் சரி தான். அதில் வழக்கு தாக்கல் செய்து உள்ள வாதிக்கு 1.22 ஏக்கர் பாத்தியம் என்றால் சரி தான். சுப்பையகவுடர் என்பவருக்கு 79 செண்டும், ரவிச்சந்திரன் என்பவருக்கு 75 செண்டும் 1ம் பிரதிவாதியான ரங்கராஜ் என்பவருக்கு 87 செண்ட் பாத்தியம் என்றால் சரி தான். மூவருக்கும் சேர்த்து மொத்தம் 3 ஏக்கர் 63 செண்ட் என்றும் வழி பாதைக்கு 10

சென்டும் உள்ளது என்றால் சரி தான். 1 முதல் 4 பிரதிவாதிகள் மாதையன் கவுடர் என்பவரின் மகன்கள் என்றால் சரி தான். அவர்களுக்கு புல எண்கள் 746, 747, 748 ஆகிய புல எண்களில் கலந்து சொத்துக்கள் இருந்தன என்றால் சரி தான். எதை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி இந்த வழக்கை புல எண்.747/2 உள்ள வழிப்பாதையில் தனக்கு உரிமை கோரி விளம்புகை பரிகாரமும், மேலும் அது தொடர்புடைய சில ஆவணங்களில் வண்டி பாதையின் உரிமை குறித்து தவறாக எழுதப்பட்டுள்ள சங்கதிகளை ரத்து செய்யவும் பரிகாரம் கோரி தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி தான். 1 முதல் 4 பிரதிவாதிகள் அவர்களுக்குள் பாக பிரிவினை எழுதிக்கொண்டது பற்றி தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதி, மாதம் மற்றும் வருடம் எழுதிக் கொண்டார்கள் என்று தெரியாது. அந்த பத்திரத்தில் வண்டி பாதையை பொறுத்து எவ்வாறு எழுதிக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1 முதல் 4 பிரதிவாதிகள் 09.06.2016 அன்று வண்டி பாதையும் பொறுத்தும் அவர்களது மற்ற சொத்துக்களை பொறுத்தும் ஒரு பாக பத்திரம் எழுதி கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண்.747/2 ஐ பொறுத்து இல்லாத உரிமையை இருப்பதாக கூறி எழுதப்பட்ட அந்த பத்திரத்தை ரத்து செய்ய கோரி தான் வாதி இந்த வழக்கையை தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி தான். 2 ம் பிரதிவாதி பத்திரப்பன் மேற்படி பாகப் பிரிவினை படி அவருக்கு கிடைத்த சொத்துக்களை யாருக்கு விற்பனை செய்தார் என்றால் இந்த வழக்கின் 6 ம் பிரதிவாதியான பாலசுப்ரமணியம் என்பவருக்கு விற்பனை செய்தார். அவருக்கு பாகபிரிவினை படி எந்த புல எண் ஒதுக்கப்பட்டது என்றால் புல எண்.748

ஒதுக்கப்பட்டது. 6 ம் பிரதிவாதிக்கு புல எண். 747 ல் எந்த பூமியும் இல்லை என்றால் உள்ளது. எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 6 ம் பிரதிவாதி பாலசுப்ரமணியனுக்கோ, 2 ம் பிரதிவாதி பத்தரிப்பனுக்கோ புல எண்.747 ல் எந்த விதமான பாகமும் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக அவர்களுக்கு பாகம் இருப்பதாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. புல எண்.747 ல் 1 ம் பிரதிவாதி ரங்கராஜ் என்பவருக்கு மட்டும் 87 செண்ட் உள்ளது என்றால் சரி தான். அவருக்கு அந்த பாகப் பிரிவினை மூலமாகத் தான்ஒதுக்கப்பட்டது என்றால் சரி தான். 3 ம் பிரதிவாதி சுப்பையன் என்பவர் தனக்கு பாகப் பிரிவினை மூலமாக கிடைத்த சொத்தை 5 ம் பிரதிவாதி சீனிவாசன் என்பவருக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் சரி தான். அந்த சொத்துக்கள் புல எண்.746 மற்றும் 748 ல் அமைந்துள்ளன என்றால் சரி தான். நான் இந்த வழக்கில் 12 ம் பிரதிவாதி என்றால் எனக்கு தெரியாது. நான் 6 ம் பிரதிவாதியிடம் இருந்து தான் புல எண்.746 ல் உள்ள வீடு மற்றும் 748 ல் உள்ள பூமி ஆகியவற்றை கிரையம் பெற்றேன் என்றால் சரி தான். 12.08.2012 அன்று நான் மகேஸ்குமார் என்பவரிடம் புல எண்.749 ல் உள்ள சொத்துக்களை கிரையம் வாங்கினேன் என்றால் சரி தான். என்னிடம் காட்டப்படுவது தான்அந்த கிரைய ஆவணம் என்றால் சரி தான். ***அது வா.சா.ஆ.19.*** அந்த ஆவணத்தில் நான் புல எண்கள்749/1 A மற்றும் 749/1B ல் பட்டா எண்.1140 க்கு ஒரு ஏக்கர் 14 செண்டும், பட்டா எண்.1139 ல் 44 செண்ட் நிலம் புல எண்.749/1 C ல் கிரையம் பெற்றேன் என்றால் சரி தான். புல எண்.749/1B 10 செண்ட் அளவுள்ள பூமி என்று தான் கிரையம் பெற்று உள்ளேன் என்றால் சரி தான். புல எண்.749/1B ல் உள்ள 10 செண்டை தான் நான் பாதையாக பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரி

தான். அந்த ஆவணப் படி புல எண்.749/1C எனக்கு தனித்து பாத்தியம் என்றால் சரி அல்ல. அது பொது வழி ஆகும். நான் எனக்கு தனிப்பட்டு பாத்தியப்பட்டு கிரையம் பெற்ற சொத்தை வழக்கிற்காக பொது வழியாக பயன்படுத்தி வருவதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. நான் வாங்கிய கிரைய ஆவணத்தில் அந்த சொத்து பொது பாதை என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரி தான். புல எண்.749/1c தொடர்ச்சியாகத் தான் தென் புறத்தில் புல எண். 748/1B ல் உள்ள வழிப் பாதை உள்ளது என்றால் சரி தான். அதன் தொடர்ச்சியாக தென் புறத்தில் தான் தாவா வண்டி பாதை புல எண்.747/2 ல் உள்ளது என்றால் சரி தான். புல எண்.747 / 2 ல் தென் புறத்தில் பள்ளவாரி உள்ளது என்றால் சரி தான். புல எண்.748/2 ஆவணங்கள் படி சிலருக்கு தனிப்பட்டு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண்747/2 ல் உள்ள தாவா வண்டி பாதை வாதி சண்முக சுந்தரம் என்பவருக்கும் புல எண்.747 ல் உள்ள மற்ற பூமிகளின் உரிமையாளர்களான சுப்பைய கவுடர், ரவிச்சந்திரன் மற்றும் 1ம் பிரதிவாதி ரங்கராஜ் ஆகியோர்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரி தான். புல எண்.746 ல் எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் சுமாராக 1 ஏக்கர் இருக்கும். புல எண்.746 ன் மேல் புறமாக தான் புல எண்.748 உள்ளது என்றால் சரி தான். புல எண்.746 க்கு தென் புறம் புல எண்.729 ல் உள்ள பள்ளவாரி உள்ளது என்றால் சரி தான். அந்த பள்ளவாரியில் இருந்து புல எண்.746 நிலங்களுக்கு செல்ல பாதை உள்ளது என்றால் இல்லை. புல எண்.746 ன் தென் பகுதியில் புல எண்.729 ல் பள்ள வாரியுடன் சேரும் நிலம் கிழ மேலாக எத்தனை அடி நீளம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண்.729 ல் இருந்து புல எண். 746 ல் நோக்கி

செல்வதற்கு நேரடியாக பாதை உள்ளது என்று தெரிந்தும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. புல எண்.747/2 ல் உள்ள வழித்தடம் புல எண்.747 ன் உள்ளவர்களுக்கு மட்டுமே பாத்தியம் என்றால் சரி அல்ல. புல எண்.747/2 ல் 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரர்கள் ஆன 2 முதல் 4 பிரதிவாதிகள் ஏற்படுத்தி கொண்ட 09.06.2016 ம் தேதியிட்ட பாக ஆவண எண்.4842/2016 ல் அவர்களது மற்ற சொத்துக்களை போல புல எண்.747/2 லும் அவர்களுக்கு ¼ வண்டி பாதை பாத்தியம் இருப்பது போல பொய்யாக காட்டி எழுதப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் அவ்வாறு பொய்யாக எழுதப்பட்ட சரத்துகளின் அடிப்படையில் தான் 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு வண்டி பாதையில் ¼ பாகம் இருப்பது போல் ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரி அல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு புல எண்.747/2 ல் எந்த விதமான உரிமையும் இல்லாமல் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரி அல்ல. 1ம் பிரதிவாதி அவருடைய ¼ பங்கினையும் வாங்குபவர்களுக்கும் தனியாக ¼ பங்கு இருப்பது போல காட்டி எழுதி கொண்டார் என்றால் சரி அல்ல. புல எண்.747 ல் உரிமை இல்லாதவர்களும் பாதையில் புதியதாக மின் இணைப்பு பெறுவதற்காக மின் கம்பங்கள் அமைக்கவும், குடி நீர் இணைப்பு பெறுவதற்காக குடிநீர் குழாயும், விவசாய பயன்பாட்டிற்காக குழாய்களும் அமைக்க முயற்சி செய்ததால் வாதி இந்த வழக்கை தமிழ்நாடு மின்சார வாரியத்தையும் ஒரு தரப்பினராக சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி அல்ல. வாதி வெளி ஊரில் இருந்து விவசாயம் செய்ய வருவர்களை மிரட்டியதாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கப்பட்டு உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணை

ஆணை உரையில் அவ்வாறு கூறி இருப்பது பொய் என்றால் சரி அல்ல. புல எண்.747/2 ல் வாதிக்கும் புல எண்.747 பூமியின் உரிமையாளர்களுக்கு மட்டும் பாத்திய பட்ட வண்டி பாதை உரிமையை எங்களும் நீட்டிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யாக நிரூபண வாக்கு மூலத்தில் கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல என்றால் சரி அல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்./- கா.கெங்காராஜ்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.